# பிரிமியர் எனர்ஜி அண்டு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

**CIN: L45201TN1988PLC015521**

**பதிவு அலுவலகம்: 1-வது தளம், கருணை குடில், 226, கதீட்ரல் சாலை, சென்னை-600 086.**
**போன்: 044-2811 0252, பேக்ஸ்: 2811 0254; இ-மெயில்: premierinfra@gmail.com**
**இணையதளம்: www.premierenergy.in**

கம்பெனியின் பங்குதாரர்களின் 25-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் (AGM) 28.09.2017 வியாழக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் பாரதீய வித்யாபவன் (மினி ஹால் - 1-வது தளம்), எண்.18, 20, 22, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004 என்ற முகவரியில் நடைபெறும் என்பது **இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.** 31.03.2017 அன்றுடன் முடிந்த ஆண்டுக்கான கம்பெனியின் வருடாந்திர கணக்குகள் இணைக்கப்பட்ட, கூட்டத்தில் பரிசீலிக்கப்பட உள்ள அலுவல்கள் குறிப்பிடப்பட்ட அறிவிப்பானது கம்பெனி அல்லது அவர்களது டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ட்ஸ்களில் தங்களது இ-மெயில் முகவரிகளை பதிவுசெய்துள்ள பங்குதாரர்களுக்கு இ-மெயில் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. கம்பெனியில் அவர்களது இ-மெயில் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு அவைகளின் பிசிக்கல் நகல்கள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு/ வருடாந்திர அறிக்கை கிடைக்கப்பெறாத பங்குதாரர்கள் அவைகளை கம்பெனியின் www.premierenergy.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும் மேற்சொன்ன ஆவணங்களின் நகல்கள் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அவைகளை வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் நடைபெறும் தேதி வரை அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்குமாற்று புத்தகங்களும் 21.09.2017 வியாழக்கிழமை முதல் 28.09.2017 வியாழக்கிழமை வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளில் 10-வது விதிமுறையின் கீழும், 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறை களில் 42-வது விதிமுறையின் கீழும் **இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.**

கட்-ஆப் தேதியான 21.09.2017 அன்றுள்ளபடி பிசிக்கல் அல்லது எலக்ட்ரானிக் படிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் நடைபெறும் இடத்தில் இருந்து வேறு இடத்தில் மேற்குறிப்பிடப்பட்ட படி கம்பெனியின் 25-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் அல்லது அனைத்து அலுவல்கள் மீது சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளை ('மின்னணுவியல் வாக்குப்பதிவு') பயன்படுத்தி மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பங்குதாரர்கள் அவர்களது வாக்குகளை பதிவுசெய்யும் வசதியை கம்பெனியானது வழங்குகிறது மற்றும் மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் அலுவல்கள் மீது பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 108-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய காலத்துக்கு காலம் திருத்தப்படும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளில் 20-வது விதிமுறையின் கீழும், 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 44-வது விதிமுறையின் கீழும் **இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.** மேலும் வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு CDSL நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.evotingindia.com) காணலாம்.

மின்னணுவியல் வாக்குப்பதிவு 25.09.2017 திங்கட்கிழமையன்று காலை 09.00 மணியளவில் (இந்திய நேரப்படி) துவங்கி, 27.09.2017 புதன்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது.

இந்த காலத்தின்போது பங்குதாரர்கள் அவர்களது வாக்கை மின்னணுவியல் மூலம் பதிவுசெய்யலாம். மேற்சொன்ன காலத்திற்கு பிறகு CDSL நிறுவனத்தால் மின்னணுவியல் வாக்குப்பதிவு பணியை மேற்கொள்ள இயலாது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு மின்னணுவியல் வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது. வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தின் போது வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்குச்சீட்டு மூலம் அவர்களது வாக்கைப்பதிவு செய்யலாம். வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்திற்கு முன்னதாக மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்கைப்பதிவு செய்த பங்குதாரர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். ஆனால் கூட்டத்தின் போது மீண்டும் அவர்களது வாக்கைப்பதிவு செய்ய இயலாது.

21.09.2017 ('கட்-ஆப் தேதி') அன்றுள்ளபடி கம்பெனியின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தில் பங்குதாரர்கள் வைத்திருக்கும் சமபங்குகளின் விகிதாச்சாரம் அடிப்படையில் பங்குதாரர்களின் வாக்குரிமை நிர்ணயிக்கப்படும். கட்-ஆப் தேதி அன்றுள்ளபடி கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பெயரைக்கொண்ட ஏதேனும் நபர் மட்டுமே வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அனைத்து தீர்மானங்களின் மீது மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலமாகவோ அல்லது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்குப்பதிவு மூலமாகவோ தனது வாக்கைப்பதிவு செய்ய தகுதி பெற்றவர் ஆவார்.

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளைப் பெற்று பங்குதாரராக பொறுப்பேற்றுள்ள ஏதேனும் நபர் மற்றும் கட்-ஆப் தேதி அன்றுள்ளபடி பங்குகளை வைத்திருக்கும் ஏதேனும் நபர் helpdesk.evoting@cdslindia.com அல்லது investor@cameoindia.com என்ற இ-மெயில் முகவரிக்கு இ-மெயில் அனுப்பி அவர்களது வாக்கைப்பதிவு செய்ய ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் கம்பெனியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் தொடர்பான அறிவிப்பில் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்வதற்கான விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மின்னணுவியல் வாக்குப்பதிவு வகைக்காக CDSL நிறுவனத்தில் ஏற்கனவே ஒரு பங்குதாரர் பதிவு செய்திருந்தால் நடைமுறையில் உள்ள ஐடி மற்றும் பாஸ்வோர்டை மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்கைப்பதிவு செய்ய பயன்படுத்தலாம். மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் அல்லது முறையீடுகள் இருப்பின் கேள்விகள் கேட்கப்படும் பிரிவுக்கு (FAQs) தொடர்புகொள்ளலாம். மற்றும் www.evotingindia.com என்ற இணையதளத்திலும் தொடர்புகொள்ளலாம். அல்லது helpdesk.evotingindia@cdslindia.com என்ற இ-மெயில் முகவரிக்கு இ-மெயில் அனுப்பி தெரிவிக்கலாம்.

மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் முறையீடுகள் இருப்பின், திரு.வென்செஸ்லாஸ் ஃபுட்டார்டோ, துணை மேலாளர், CDSL, பைரோஸ் ஜீஜீபாய் டவர்ஸ், 16-வது தளம், தலால் தெரு, கோட்டை, மும்பை-400 001, இ-மெயில்: helpdesk.evoting@cdslindia.com, போன்: 1800 200 5533 என்பவரை தயவுசெய்து தொடர்புகொள்ளலாம். வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கும் உரிமை பெற்ற நபர்கள் நேரிலோ அல்லது தனது பதிலி மூலமாகவோ கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கலாம். பதிலிகள் நியமனப்படிவத்தை பங்குதாரர் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு பதிலியானவர் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிப்பதற்காக வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக அதனை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி**

**பிரிமியர் எனர்ஜி அண்டு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெடுக்காக**

**ஒ-ம்/-**

**M. நாராயணமூர்த்தி**

**நிர்வாக இயக்குனர்**

DIN:00332455

இடம்: சென்னை
தேதி: 04.09.2017